மூலம்: சாக்ஷுஷி வித்யா (சமஸ்கிருதம்)

தமிழாக்கம்: ஸ்ரீதேவிபிரசாத்

*********************************

கண்களின் காவலா ! கதிரவா ! - எந்தன்
கண்ணொளியாய் நிலையாகி வா !
கண்களின் நோயினை கணத்தினில் நீக்கியே
காத்து அருளவே வா !
தங்கமாய் மின்னும் உன் ஜொலிப்பினை
எனக்கு நீ காட்டியே வா ! வா !
மின்னிடும் ஒளியிலும் என் கண்கள் கூசாது
மாயமும் செய்து வா !

மங்கலம் அருள வா ! மங்கலம் அருள வா !
தங்கமாய் ஒளிர்பவா ! மங்கலம் அருள வா !
கண்களை வாட்டுமென் முன்வினைப் பாவங்கள்
யாவையும் அழிக்க வா ! வா !
கூரிய பார்வையின் ஒளியினைத் தருபவா !
சூரிய தேவனே உன்பதம் போற்றி !
உன்பதம் போற்றி ! போற்றி !
விண்ணெலாம் விரிந்தவா போற்றி !
மாபெரும் உத்தமா போற்றி !
உயிரெலாம் இயங்கிடும் ஆற்றலைத் தந்திடும்
ரஜோ குண தேவனே ! போற்றி ! போற்றி !
இருளினைத் தன்னுளே ஈர்த்து ஒளி தருகின்ற
இரவியே ! போற்றி ! போற்றி !
என்னுளே உள்ளதாம் அல்லவை யாவையும்
நீக்கி நீ நல்லவை சேர்த்துவைப்பாய் !
உச்சமாய் வெப்பத்தை உமிழ்ந்திடும் தேவனே !
சத்தியம் என்பதன் மறுவடிவாய் ஆன வா !

PSDPrasad Music

மூலம்: சாக்ஷுஷி வித்யா (சமஸ்கிருதம்)

தமிழாக்கம்: ஸ்ரீதேவிபிரசாத்

**********************************

ஜொலிப்புடன் ஒளிர்ந்திடும் உன்னெழில் மேனிக்கு
ஈடில்லை எங்கனும் எப்பொழுதுமே !!
முக்காலம் அறிந்ததுவாம் உனதுஒளிர் கிரணங்கள் !
எல்லார்க்கும் சமமானாய் ! உனக்கில்லை பேதங்கள் !
தங்கமய தேவனே ! சச்சிதானந்தனே !
அண்ட ப்ரசண்டத்தின் மூலவனாய் ஆன வா
அறுவகை செல்வமும் அளித்திடும் நாதனே!
அர்க்யத்தை ஏற்றிடுவாய் ஆதித்ய தேவனே !
உலகெலாம் இருளினை நீக்கவே தினகரா !
உதவிடு என்று வேண்டி...
பறவைபோல் சிறகுடன் ரிஷிகளும் உன்னிடம்
சரணமாய் வந்ததால் நீ உதித்தாய் !
ஆகுதி விரும்பிடும் ஆதித்யா போற்றி ! போற்றி !
அகிலமே தன்னுளே அடக்கிய தேவே போற்றி !

சக்சுஷி வித்யா எனுமிந்த துதியினை அனுதினமும்
பக்தியுடன் சொல்லிவந்தால்
கண் சார்ந்த பிணி ஏதும் கட்டாயம் வாராதே !
சொல்வாரின் குலத்தினிலே என்றும் ஒளி நீங்காதே !

PSDPrasad Music